இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் எல்லையற்ற நிகழ்காலத்திற்கான ஆழ்ந்த தாகம் உள்ளது என்றும், பெற்றோர்கள் இறைத்தந்தையின் தந்தைத்துவம் பற்றி தங்கள் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டிய கடமையைக் குறிக்கிறது என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை.**

# கிறிஸ்தவ சமூகம் தொலைநோக்கு பார்வையுடன் இருப்பது முக்கியம்


குடும்பங்கள், குழந்தைகள், தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோருக்கான யூபிலி திருப்பலியில் கலந்துகொண்ட குடும்பத்தார் (ANSA)

இன்றைய உலகின் சவால்களைப் புரிந்துகொள்வதிலும், ஒவ்வொருவரின் இதயத்தில் இருக்கும் நம்பிக்கைக்கான விருப்பத்தை வளர்ப்பதிலும், கிறிஸ்தவ சமூகம் தொலைநோக்குப் பார்வையுடன் இருப்பது முக்கியம் என்றும், பல்வேறு காரணங்களுக்காக, ஆன்மீக ரீதியாக நம்மிடமிருந்து மிகவும் தொலைவில் உள்ள குடும்பங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

ஜூன் 2, திங்கள்கிழமை “இன்றைய மற்றும் எதிர்கால குடும்பங்களுடன் நற்செய்தியை அறிவித்தல், திரு அவையில் மேய்ப்புப்பணி சவால்கள்” என்ற தலைப்பில் “பொதுநிலையினர், குடும்ப வாழ்வு, திருப்பீடம்” துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் பங்கேற்றவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

இந்த கருப்பொருளானது திருஅவையின் தாயன்பு கிறிஸ்தவ குடும்பங்கள் வழியாக கிறிஸ்துவின் மறைபொருளாம் உடலின் உயிருள்ள உறுப்பினர்களாக இருக்கும் உலக மக்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதை எடுத்துரைக்கின்றது என்றும், இம்மக்களே திருஅவையின் முதன்மையாகவும், இவர்களிடமே புதிய தலைமுறையினருக்கு நம்பிக்கையையும், நற்செய்தியையும் பரப்புவதையும் இறைவன் ஒப்படைக்கிறார் என்றும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் எல்லையற்ற நிகழ்காலத்திற்கான ஆழ்ந்த தாகம் உள்ளது என்றும், பெற்றோர்கள் இறைத்தந்தையின் தந்தைத்துவம் பற்றி தங்கள் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டிய கடமையைக் குறிக்கிறது என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை.

“ஆண்டவரே, உம்மில் வாழ்வின் ஆதாரம் எங்களுக்கு இருப்பதால், உமது ஒளியில் நாங்கள் ஒளியைக் காண்போம்” என்ற புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளை சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், நமது காலம் ஆன்மீகத்திற்கான வளர்ந்து வரும் தேடலால் அடையாளப்படுத்தப்படுகின்றது என்றும் கூறினார்.

திருஅவையை அதன் மேய்ப்பு மற்றும் மறைப்பணி பயணத்தில் கொண்டு செல்லுதல், கிறிஸ்துவை சந்திப்பதன் வழியாக, தீமை மற்றும் மரணத்தின் நீரிலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்றுவதற்காக, மனிதகுலத்தின் ”மீனவராக” நாம் மாற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# சிறார்களுக்கு எதிரான பாலியல் முறைகேடுகள்: திருத்தந்தை லியோவின் கடுமையான கண்டனம்


பாலியல் முறைகேடுகளுக்கு ஆளாகும் சிறார்களைப் பாதுகாக்கும் பாப்பிறை அமைப்பினருடன் திருத்தந்தை (@Vatican Media)

பாலியல் முறைகேடுகளுக்கு ஆளாகும் சிறார்களைப் பாதுகாப்பது கொள்கைகள் மட்டும் அல்ல, நீதிக்கும் அன்புக்கும் அடிப்படையிலான கடமையாக இருக்க வேண்டும் என திருத்தந்தை பதினான்காம் லியோ வலியுறுத்தினார். ஜூன் 5 அன்று, பாப்பிறை அமைப்பின் ஆண்டு நிறை அமர்வில் பங்கேற்ற 22 உறுப்பினர்களை திருப்பீடத்தில் சந்தித்தபோது, இந்த பணிக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களை அவர் பாராட்டினார். சிறார்களுக்கு எதிரான பாலியல் முறைகேடுகள் திருஅவையின் புனிதத்தையே தீண்டுபவை என்றும், இது கடுமையான பாவமாகும் என்றும் அவர் தெரிவித்தார். இது கடவுளின் நற்செய்திக்கு மாறானது என்றும், திருஅவையின் அமைப்புகள் அனைத்தும் – பங்குத் தளங்கள், மறைமாவட்டங்கள், துறவறக் குழுமங்கள் – குழந்தைகள் பாதுகாப்பில் முன்னிலை வகிக்க வேண்டும் என்றும் கூறினார்.

பாலியல் முறைகேடுகளை எதிர்கொள்ள திருஅவை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், அந்த அமைப்பின் முயற்சிகளில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே ஆண்டுக் கூட்ட அறிக்கையைத் தயாரிக்குமாறு கேட்டிருந்ததாகவும் திருத்தந்தை லியோ தெரிவித்தார். இந்த அறிக்கை திருத்தப்பட்டு, இந்த ஆண்டு வழங்கப்படவிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நம்பிக்கையை மீட்டெடுக்கக் கொள்கைகள் மட்டும் போதாது; உண்மையான மாற்றத்திற்கு கலாச்சாரம், மனமாற்றம், துணிவு ஆகியவைகள் தேவை என்று திருத்தந்தை வலியுறுத்தினார். மேலும், செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் நிகழும் பாலியல் முறைகேடுகளையும் புதிய சவால்களையும் இந்த அமைப்பின் பார்வையில் வைத்துள்ளதாகவும் கூறினார்.




# ஒடிஷாவில் மதமாற்றம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட கத்தோலிக்க அருட்சகோதரியும் மாணவிகளும்

2025 ஜூன் 1 அன்று, திருக்குடும்பச் சபையைச் சேர்ந்த இளைய அருட்சகோதரி ரசனா நாயக்-கும் சில மாணவிகளும், ஒடிசா மாநிலத்தின் கோர்தா மாவட்டத்திலிருந்து டெல்லி நோக்கி ராஜா ராணி எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தனர். ஜாட்னியில் உள்ள கோர்தா ரோடு ரயில் நிலையத்தில் பஜரங்க் தளத்தினர் அவர்களை வழிமறித்து மதமாற்றம் செய்ய முயன்றதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, அரசு ரயில்வே காவல் படை (GRPF) அவர்கள் மீது விசாரணை நடத்தியது. அந்த அமைப்பினர், “இளம்பெண்களை கல்வி என்ற பெயரில் கடத்தி, மதமாற்றம் செய்யும் திட்டம்தான் இது” எனக் கூறி, இவர்கள் ஆங்கிலம் கற்று வெளிநாடுகளுக்குச் செல்லும் வழலை சுட்டிக்காட்டினர்.

இந்த சம்பவமானது, மதச்சார்பற்ற கல்வி வாய்ப்புகளைத் தேடி பயணிக்கும் மாணவிகள் மீது தவறான சந்தேகங்களை ஏற்படுத்துவதோடு, மதமாற்ற குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது திணிக்கும் முயற்சியாகும். அருட்சகோதரி மீதும் மாணவிகள் மீதும் இப்படிப்பட்ட அவதூறுகளும் சித்ரவதைகளும் மேற்கொள்வது, ஒரு சுதந்திர நாட்டில் நடக்கக்கூடிய விடயம் அல்ல என்று புவனேஸ்வர உயர் மறைமாட்டத்தின் அருட்தந்த்தை குமார் பெஹெரா கண்டனம் தெரிவித்தார்.

இந்தச் வழலில் GRPF நிலையத்துக்குச் சென்று, அக்குழுவின் நலனை உறுதி செய்த வழக்கறிஞர்கள் கிளாரா டி’வசா, வஜாதா ஜேனா மற்றும் செவந்தி சோரெங் ஆகியோருக்கு திருக்குடும்பச் சபை மாநிலத் தலைவர் அருட்சகோதரி அருணா ஜோஸ் நன்றி தெரிவித்தார். மதவெறியர்களால் சட்டவிரோதமாகக் காவலில்வைக்கப்பட்டபோதும், அருட்சகோதரி ரசனாவும் மாணவிகளும் காட்டிய துணிவும் விசுவாசமும் பாராட்டத்தக்கது என அவர் கூறினார்.

# ‘நற்கருணையும் திருஅவையும்’

## காஜாங். திருக்குடும்ப பங்கில் சிறப்பு சொற்பொழிவு





காஜாங்: கடந்த மே மாதம் 27ம் நாள் செவ்வாய்க்கிழமை, திருக்குடும்ப ஆலய மண்டபத்தில், தமிழகத்தைச் சேர்ந்த அருள்பணி முனைவர் அருள் மணி அவர்களின் “நற்கருணையும் திருஅவையும்” என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது. மாலை 7.30 மணிக்குத் தொடங்கி, இரவு 10.00 மணிவரை நடைபெற்ற இச்சொற்பொழிவில் 350க்கும் அதிகமான மக்கள் கலந்து பயன்பெற்றனர்.

சென்னை, மயிலாப்பூர் உயர் மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு அருள் மணி, அங்குள்ள ‘கிறிஸ்து கல்லூரியில்’ முதல்வராக பணியாற்றி வருகிறார்.

விவிலியம் வருவதற்கு முன்பே தொடக்கக்காலக் கிறிஸ்துவர்கள் நற்கருணை எனும் ‘அப்பம் பிடுதலில்’ பங்கேற்றனர் என்றும், நற்கருணையையும் திருத்தூதர்களின் போதனையும் திருஅவையின் ஆதாரமாக இருந்தது (திப.2:42) என்றும் வலியுறுத்தினார். தொடர்ந்து, பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமுக்கு சாலேம் அரசர் மெல்கிசெதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொடுத்ததை ‘நற்கருணைக்கு’ முன்னோடியாக உள்ளதை விவரித்ததோடு, லேவியர் நூலில் உடன்படிக்கை பேழை செய்யப்பட்ட போதே அதில் அப்ப மேசை அமைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, நற்கருணையின் தோன்றுதொட்ட வரலாற்றை நினைவுக்கூர்ந்தார்.

புதிய ஏற்பாட்டில் பவுல் அடிகள் நற்கருணையின் சிறப்பு மற்றும் அதன் இறையியலையொட்டி முதல் கொரிந்தியர் திருமுகத்தில் எடுத்துரைத்ததையும், இராவுணவில் இயேசு ‘பயன்படுத்திய வார்த்தைகளின் உள்ளார்ந்த பொருளையும்’ தெளிவுப்படுத்தினார். தொடர்ந்து சில மறைநூல் மேற்கோள்களோடு திருஅவையின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தி, கத்தோலிக்கத் திருஅவையின் மேன்மையையும் பிரிந்த சபைகள் கொண்டிருக்கும் வேறுபாட்டையும் எடுத்துரைத்தார்.

நற்கருணை வெறும் சடங்கல்ல. நற்கருணை திருஅவையின் ஊற்றாகவும் உச்சமுமாகவும் உள்ளது என்றும், கத்தோலிக்கத் திருஅவை என்றும் இயேசுவை மையமாகக் கொண்டது என்றும் போதித்தார்.

- ஆர்.கே. சாமி

# கிறிஸ்துவ சிறைச்சாலை வலையமைபின் முதல் தேசிய செபக்கூட்டம்



பெட்டாலிங் ஜெயா: மலேசிய கிறிஸ்துவ சிறைச்சாலை ஊழியத்தின் மிக முக்கிய நிகழ்வாக, புதிதாக உருவாக்கப்பட்ட ‘கிறிஸ்துவ சிறைச்சாலை வலையமைப்பு’ (CPN) தனது முதல் தேசிய அளவிலான சிறப்பு செபக்கூட்டத்தை ஏற்று நடத்தியது. இச்செபக்கூட்டத்தில் ‘Malaysian CARE’, Prison Fellowship Peninsula Association (PFPA), Catholic Prison Fellowship Association (CPFA) ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 29 பணியாளர்களும் தன்னார்வலர்களும் ஒன்றிணைந்துக் கலந்துக்கொண்டார்கள்.

இச்செபக்கூட்டம் பெட்டாலிங் ஜெயாவில் உள்ள ‘Council of Churches of Malaysia’ (CCM) தலைமையகத்தில் நடைப்பெற்றது. இறைப்புகழ்ச்சி, ஒருங்கிணைப்பு, கூட்டாகச் செயல்படல் ஆகியவற்றிற்கான ஒரு பலம் வாய்ந்த முற்சியாக இது அமைந்தது. CCM-மின் பொதுச்செயலாளரான Rev. Philip Lok, பங்கேற்பாளர்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பேசிய CPN ஆலோசகரான Bishop Emeritus Ong, 1 குறிப்பேடு 12:23–40 இறைவசனங்களின் அடிப்படையில் அற்புதமான ஊக்கமளிக்கும் இறைச்செய்தியினை வழங்கினார், அவர் ஒருமைப்பாடு, தயார் நிலை, கிறிஸ்துவின் பணி மீதான அர்ப்பணிப்பை வலியுறுத்திப் பேசினார்.

நற்செய்தியாளர் யோவான் 17:20–23 இறைவசனங்களைக் கொண்டு, நான்கு முக்கிய பகுதிகளுக்காகச் செபங்கள் ஏறெடுக்கப்பட்டன:

- நாடு – தலைவர்கள், அமைதி, நீதி
- பணி – சிறைகளிலும் பாதிகால வீடுகளிலும் சேவை
- மக்கள் – கைதிகள், முன்னாள் குற்றவாளிகள், தன்னார்வலர்கள், அவர்களது குடும்பங்கள்
- கூட்டாளர்கள் – தேவாலயங்கள், நன்கொடையாளர்கள், ஆதரவாளர்கள்

CPN, கிறிஸ்துவ சிறைச்சாலை ஊழியத்தின் தேசிய குரலாகவும், ஒன்றிணைக்கவும் கூட்டுப் பணியை ஊக்குவிக்கவும் ‘நிக்கேய’ கிறிஸ்துவ அறிக்கையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது.

இந்த தொடக்க நிகழ்வு ஆழமான கூட்டுறவுகளுக்கும் ஒருங்கிணைந்த வெளியுறவுகளுக்கும் அடித்தளமிட்டுள்ளது.

"இந்த வலையமைப்பு மூலம் கடவுள் புதிதாய் ஒன்றை செய்கிறார் என்ற வலுவான உணர்வு எனக்குள் தோன்றியது," என பங்கேற்பாளர் ஒருவர் பகிர்ந்துக் கொண்டார்.

2025–2026 காலத்திற்கான CPN-யை வழிநடத்தும் செயற் குழு எதிர்காலத்தில், செபக்கூட்டங்கள், பயிற்சிகள், தேசிய அளவிலான திட்டங்கள் ஆகியவைகளை முன்னெடுக்க உள்ளது. சிறையில் இருக்கும் போது ஏற்படும் தனிமை, சமூக குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் சூழல் ஆகியற்றின் போது CPN நம்பிக்கையும், ஆதரவையும், எதிர்நோக்கையும் வழங்கும் ஒரு ஒன்றியமான உந்துசக்தியாக தொடர்ந்து விளங்கும் என்று உறுதியளிக்கிறது.



# நற்கருணை பணியாளர்களுக்கான உருவாக்கப் பயிற்சி: "உணவருந்த வாருங்கள்" (யோவான் 21:12)

கடந்த மே 25-ஆம் நாளன்று, கிள்ளான் லூர்து அன்னை தேவாலயத்தில் நற்கருணை பணியாளர்களுக்கான ஒரு நாள் உருவாக்கப் பயிற்சி நடைப்பெற்றது. அருட்பணியாளர் ஞான செல்வம் பிரந்திஸ் அவர்கள் "உணவருந்த வாருங்கள்" (யோவான் 21:12) என்ற மையக்கருத்தில் இந்த பயிற்சியை வழிநடத்தினார்.

அருட்பணியாளர் செல்வா அவர்கள், நற்கருணை பணியாளர்கள் திருப்பலியில் நற்கருணை வழங்குவதில் மட்டுமல்லாமல், திருஅவையில் முக்கியப் பங்கும் வகிக்கின்றனர் என்பதை நினைவுப்படுத்தினார்.

திருப்பலியில் கலந்துக்கொள்ள இயலாதவர்கள், வீட்டில் அல்லது மருத்துவமனைகளில் உடல் நலமின்றி உள்ளவர்கள் ஆகியோர்களுக்கு திவ்விய நற்கருணையை எடுத்துச் செல்லவும், இறப்புகள், பிறந்தநாள் ஆசிகள், தேவைப்படும் நேரங்களில் செபிக்கவும் நற்கருணைப் பணியாளர்கள் அழைக்கப்படுகிறார்கள் என்றார் அவர்.

சாட்சிமிக்க பணியாளராக உருவாகிட, அன்றாட செபமும் இறைவார்த்தை வாசித்து தியானிப்பதும் அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்று அருட்பணியாளர் செல்வா வலியுறுத்தினார். இந்த அடித்தளம் இல்லாமல் போனால் கிறிஸ்துவின் திருஉடலை உண்மையான இறை விசுவாசத்துடனும் இரக்கத்துடனும் சுமப்பது கடினமாகிவிடும்.

எளிமையான முறையில் இறைவார்த்தையை எவ்வாறு தியானிப்பது என்பதையும், ஒவ்வொரு நாளும் நமது நாளை நற்செய்தி வாசித்து தொடங்க வேண்டும் என்பதையும் அவர் மேலும் வலியுறுத்தினார். நமது மனதைத் தொட்ட இறைவசனத்தை தியானித்து, ஆண்டவர் நம்முடன் எப்படி பேசுகிறார் என்று தியானிக்க வேண்டும் என்று கூறிய அவர் ஆரம்பத்தில் இது மிகவும் கடினமாக இருக்கலாம், ஆனால் தொடர்ந்து நாம் பயிற்சி செய்தால், அமைதி, அன்பு, இரக்கம் நிறைந்தவராக உருமாற முடியும் என்று தெளிவுபடுத்தினார்.

பயிற்சியின் மேலுமொரு அங்கமாக திருப்பலியின் முழு பொருள் குறித்து விளக்கினார்; அது ஒரு மகிழ்ச்சியான கொண்டாட்டம் மட்டுமல்ல, ஆண்டவரின் அர்ப்பணிப்பு நிறைந்ததாகவும் இருக்கிறது. இயேசு நாம் ஒவ்வொருவரையும் "உணவருந்த வாருங்கள்" (யோவான் 21:12) என்று அழைத்தார். அதேபோல், நாமும் நற்கருணை ஆராதனையிலும், திரு மணி ஆராதனையிலும் கலந்துகொண்டு, இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தை நற்கருணையின் வழியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அனைவரையும் ஊக்குவித்தார்.



உடல் நலக் குறைவால் திருப்பலிக்கு வர இயலாமல், வீட்டில் இருப்பவர்களிடம் நற்கருணையை எடுத்துச் செல்வது, அவர்களை அணுகும் ஒரு வகையான சிறப்பு ஆன்மீகப் பணியாகும். இந்தப் பணி அவர்களை விசுவாச சமூகத்துடன் இணைக்க உதவுகிறது என்றும் கூறினார்.

இந்தப் பயிற்சி அனைத்து நற்கருணை பணியாளர்களுக்கும், அவர்களின் வல்லமை அவர்களின் கடமைகளில் மட்டுமல்ல, மாறாக கிறிஸ்துவுடனான உறவிலும் உள்ளது என்பதை நினைவூட்டியது என்பதில் சிறிதும் ஐயமில்லை. "உங்கள் பணியின் வலிமை உங்கள் ஜெப வாழ்க்கையின் வலிமையைப் பொறுத்தது" என்றுக் கூறி அருட்பணியாளர் செல்வா இப்பயிற்சியை நிறைவுச் செய்தார்.

நேசா தேவசாகயம் - கிள்ளான் லூர்து அன்னை

# மூவொரு கடவுள்-பெருவிழா

**நீமொ 8:22-31, உரோ 5:1-5, யோவா 16:12-15**

இன்று திருஅவை மூவொரு கடவுள் பெருவிழாவை கொண்டாட அழைக்கிறது. இன்று மூவொரு கடவுள் எனும் நமது இறையியலைப் பற்றி சிந்திப்பது அவசியமாகும். இந்த இறையியலை நமது அறிவைக்கொண்டு புரந்துகொள்வது சாத்தியமன்று. னய ஆவியாரின் வெளிப்படுத்துதலில் நமது உணர்வுப்பூர்வமாக அறிந்துணர இயலும்.

இன்றைய முதல் வாசகத்தில் (காண். நீமொ 8:22-31) 'ஞானம் என்னும் பெண்' தன் வரலாற்றைக் கூறுகிறாள். இந்த ஞானமே படைப்புச் செயலில் முக்கியமான பங்கு வகிக்கிறது. ஒழுங்கற்ற உலகில் ஒழுங்கை ஏற்படுத்தும் நில வரைபடமாக இருக்கின்றாள் ஞானம். இவள் வழியாகவே கடவுள் உலகை உருவாக்கி அதற்கு உயிர் கொடுக்கிறார்.

இரண்டாம் வாசகம் (காண். உரோ 5:1-5) இரண்டாம் நபரான இயேசுவை மையப்படுத்தியதாக இருக்கிறது. நற்செய்தி வாசகம் (யோவா 16:12-15) மூவொரு கடவுள் குடும்பத்தின் மூன்றாம் நபரான தூய ஆவியாரை மையமாகக் கொண்டுள்ளது. எங்கெல்லாம் அன்பு உள்ளதோ அங்கெல்லாம் மூவொரு கடவுளின் உடனிருப்பு இருக்கும். ‘அன்பு செய்பவரும், அன்பு செய்யப்படுபவரும், அன்பின் ஊற்றும் அவரே’ என்ற அகுஸ்தினாரின் கூற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாகும்.

நம் இறைவன் மூவொரு கடவுள் என்பதை நமக்கு அறிமுகம் செய்தவர் இயேசு. இயேசுவின் காலம்வரை, இஸ்ரயேல் மக்களுக்கு அறிமுகமான கடவுள், தானாக இருக்கும், தனித்திருக்கும், தனித்து இயங்கும் ஒரு கடவுள். தனித்திருக்கும் கடவுளை, தந்தை, மகன், தூயஆவியார் என்ற, ஒரு கூட்டுக் குடும்பமாய் அறிமுகம் செய்தவர், இயேசு. இயேசு இவ்விதம் அறிமுகம் செய்துவைத்த மூவொரு இறைவனின் இலக்கணம், நமக்குச் சொல்லித்தரும் பாடம் என்ன? நாம் வழிபடும் இறைவன், உறவுகளின் ஊற்று என்றால், நாமும் உறவுகளுக்கு முக்கியமான, முதன்மையான இடம் தர அழைக்கப்பட்டுள்ளோம் என்பதுதானே அந்தப் பாடம்?

கண்ணதாசன் அவர்கள் கூறுவார்...

- மனையாள் சுகம் யாதெனக் கேட்டேன் மணந்து பார் என்றார் கடவுள்....
- நட்பு என்பது யாதெனக் கேட்டேன் பழகிப் பார் என்றார் கடவுள்....
- அனைத்தையும் நான் அனுபவித்தே அறிய வேண்டுமென்றால் ஆண்டவனே நீ எதற்கு? என்றேன்...
- அந்த ஆண்டவன் சற்று அருகே வந்தான் அந்த அனுபவமே நான்தான் என்றான்....

இன்று நமது அனுபவத்தின் துணை கொண்டு மூவொரு இறைவனை நாம் அறிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

எனவே தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் என்ற இறைவேண்டலை நாம் சொல்லும் பொழுது ஏதோ கடமைக்காக சொல்லிவிட்டு செல்பவர்களாக அல்லாமல் அதனை சிந்தித்து தியானித்து உளமாற சொல்வோம். நம் வாழ்க்கையில், தந்தை அன்பைப் பொழிபவர், மகன் நட்பை வலுப்படுத்துபவர் தூய ஆவியோ திடம் தருபவர், மூன்று ஆட்கள் தனித்தனியே, நற்பண்பின் மையங்கள். இணைப்பின் பாலங்களாக உள்ளனர்.

தந்தை மகன் தூய ஆவி - மீட்புத் திட்டத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் இணைந்து செயல்படுகிறார்கள். ஒரே ஞானம், ஒரே சித்தம், ஒரே வல்லமை என்பது மூவரிடமும் விளங்கிய அன்புறவை, தனித்துவத்தை, சமத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

தந்தை, மகன், தூய ஆவியார் மூவரும் எப்படி நிறைவான உறவில் நிலைத்திருந்து, ஆக்கப் பணியில் ஈடுபடுகிறார்களோ அதேபோல மனிதர்கள் அனைவரும் அருள்நிலையில் வாழ்ந்து அனைவரோடும் ஒற்றுமையாக வாழ முன்வர வேண்டும்.

- M. சவரிநாதன், சுங்கை பட்டாணி